**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.301/2017**

Date: 23.01.2025.

PW– 6 – தியாகராஜன்

A1, A2 present.

சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பொதுவாக ஒரு இடத்தில் பிரேதம் கிடந்தால் அதை சுற்றியுள்ள இடங்கள் யாரும் வராமல் சாட்சிங்கள் கலையாமல் பாதுகாக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் சென்ற போது பிரேதம் கிடந்த இடம் தடுப்புகாளால் பாதுகாப்பு செய்யப்பட்டிருந்ததா என்றால் அது எனக்கு நினைவில்லை. நான் செல்வதற்கு முன்பு எவ்வளவு நேரம் முன்பாக போலிசார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் 6.00 மணிக்கு தான் சென்றேன்.

நான் சென்ற பின்பு பிரேதம் கிடந்த இடத்தை சுற்றி சோதனை செய்து பார்த்தார்களா என்றால் ஆமாம். பார்த்தார்கள். போலிசார் பார்த்தபோது மகஜரில் கைப்ற்றப்பட்ட பொருட்களை தவிர வேறு பொருட்கள் அங்கு இல்லை என்று சொன்னால் மகஜரில் கைப்பற்றிய பொருட்களை தான் நான் பார்த்தேன். பிரேதம் கிடந்த இடத்தை சுற்றி சுமார் ½ கி.மீ. போலிசார் சோதனை செய்து பார்த்தார்கள். பிரேதம் கிடந்த இடம் மாணிக்கத்தின் அனுபவத்தில் இருந்த இடம் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேன். ஆவணத்தை பார்க்கவில்லை. யாரை விசாரித்து தெரிந்துகொண்டேன் என்பதை நான் புலன்விசாரணையில் சொல்லவில்லை.

மாணிக்கம் அனுபவத்தை தவிர பக்கத்தில் உள்ள நிலங்கள் யார் யார் அனுபவத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்தில் என்ன விவசாயம் செய்யப்பட்டிருந்தது என்று எனக்கு நினைவில்லை. நான் சம்பவஇடத்திற்கு சென்றவுடன் சம்பவத்தை யார் செய்தார்கள் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேன். நான் போவதற்கு முன்பு எதிரியை எப்போது எங்கு எத்தனை மணிக்கு கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வெடிபொருள், வெடிபொருள் சம்மந்தப்பட்ட பொருட்களை கைப்பற்ற அது தொடர்பான நிபுணர் வேண்டும் என்றும்

நான் அவ்வாறான நிபுணரா என்றால் இல்லை. வெடிபொருள் மற்றும் வெடிபொருள்சம்மந்தப்பட்ட பொருட்களை கைப்பற்றப்பட்டால் உரிய உபகரணங்களில் கைப்பற்றி மூடி சீல் வைக்கப்படவேண்டும் என்றும், அவ்வாறு பொருட்கள் எதுவும் என்முன்பு கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை.

நான் கைதுசெய்யப்பட்டதாக சொல்லும் பஸ்டாப்பில் மக்கள் நடமாட்டம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் புலன்விசாரணையில் போலிசார் பேருந்து நிறுத்தில் இருந்த தனிநபர் சாட்சிகளை அழைத்தார்களா என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மாரமங்கலம் பஸ்ஸ்டாப்பில் சுமார் 10 நிமிடம் நின்றிருந்தேன். 10 நிமிடத்தில் பொதுமக்கள் யாரும் பார்த்தார்களா என்று எனக்கு நினைவில்லை.

நான் சொல்வது போல் சொன்ன நேரம், நாள், சொன்ன விதத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. என் முன்பு எந்த பொருட்கள் எதுவும் மகஜர் மூலம் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1வது எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், அவரிடம் இருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், அவரிடமிருந்து பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்களில் முத்திரையிடாதற்கு காரணம் போலிசார் கேட்டுகொண்டதன் படி நான் கையெழுத்து போட்டு கொடுத்தது தான் என்றால் சரியல்ல. எனக்கு எழுத்துமூலம் அழைப்பாணை எதுவும் வரவில்லை. உண்மையில் போலிசார் உடன் புலன் விசாரணையில் இருந்திருந்தால் கிராமநிர்வாக விதிகள் பின்பற்றப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. கிராமநிர்வாக விதிமுறைகளை பின்பற்றாமல் நான் ஒரு வழக்கில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd–L. Kalaivani,

III Additional District Judge, Salem.